**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.78/2015**

**வழக்கு சாட்சி: PW.10**

**தேதி: 14.06.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **ஸ்டானிஸ்பால்மாஸ்கி** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **அருள் ஆரோக்கியசாமி** | **தொழில்:** | **மருத்துவர்** |
| **கிராமம்:** | **மதுரை** | **சமயம்:** | **கிறிஸ்தவர்** |
| **தாலுகா:** | **மதுரை** | **வயது:** | **36/2023** |

(எதிரி ஆஜர் இல்லை, எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு-317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 07.01.2015 அன்று மானாமதுரை அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியிலிருந்தேன். கடந்த 07.01.2015ம் தேதி அன்று காலை 10.00 மணியளவில் நான் அலுவலில் இருந்த போது மானாமதுரை சிப்காட் காவல் நிலைய குற்ற எண்.3/2015 பிரிவுகள் 294(பி), 302, 506(2) இதச வழக்கில் கொலையுண்டு இறந்து போனவர்களான வேலூர் ஒத்தவீட்டைச் சேர்ந்த அழகு மனைவி திருமதி. ஆறுமுகம் வயது 65/2015 என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்ய வேண்டிய மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளரின் பரிந்துரை கடிதத்துடன் பெண் காவலர் 966 திருமதி.ராதா என்பவரும் இறந்து போன இருளப்பன் மனைவி தனபாக்கியம் வயது 45/2015 என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்ய வேண்டிய மானாமதுரை குற்றப் பிரிவு காவல் ஆய்வாளரின் பரிந்துரை கடிதத்துடன் பெண் காவலர் முதல்நிலை காவலர் திருமதி.சத்யா என்பவரும் இறந்து போன பாண்டிதுரை மனைவி ராஜேஸ்வரி வயது 22/2015 என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை வேண்டி மானாமதுரை வட்ட காவல் நிலைய ஆய்வாளர் பரிந்துரை கடிதத்துடன் பெண் காவலர் திருமதி.செங்கொடி என்பவரும் என்னிடம் மேற்படி 3 கடிதங்களை தந்ததின் பேரில் நான் சவக்கிடங்கிற்கு சென்று 3 பெண் காவலர்கள் கூறிய பிரேதங்களை அவர்கள் அடையாளம் காட்டியதின் பேரில் 3 பிரேதங்களையும் மானாமதுரை அரசு

மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து காலை 10.15 மணிக்கு அழகு மனைவி ஆறுமுகம் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்தேன். காலை 11.15 மணிக்கு இருப்பன் மனைவி தனபாக்கியம் என்பவரின் பிரேத்தை பிரேத பரிசோதனை செய்தேன். அடுத்து 12.15 மணிக்கு பாண்டிதுரை மனைவி ராஜேஸ்வரி என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்தேன். பிரேத பரிசோதனைகள் செய்து 3 தனித்தனி பிரேத பரிசோதனை சான்றுகள் வழங்கினேன். திருமதி.ஆறுமுகம் என்பவரின் பிரேதத்தை நான் பிரேத பரிசோதனை செய்து நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.7** ஆகவும், திருமதி.தனபாக்கியம் என்பவரின் பிரேதத்தை நான் பிரேத பரிசோதனை செய்து நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.8** ஆகவும், திருமதி.ராஜேஸ்வரி என்பவரின் பிரேதத்தை நான் பிரேத பரிசோதனை செய்து நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. திருமதி.ஆறுமுகம் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கையில் மேற்படி ஆறுமுகம் மெலிதான தேகம் உடையராக இருந்தார். கண்கள் மூடிய நிலையில் இருந்தது. நாக்கு வாயின் உட்பகுதியில் இருந்தது. இடது கழுத்தும் முகத்தின் இடப்புறமும் ரத்த கறை படிந்திருந்தது. 14 செ.மீ நீளமுள்ள வெட்டுக் காயம் கழுத்தின் இடதுபுறம் நாடியின் கீழே 2 செ.மீ தூரத்திலிருந்து இடதுபக்க Mastoid 7 செ.மீ கீழே வரை நீண்டு இருந்தது. அந்த காயத்தின் அதிகபட்ச ஆழம் 6 செ.மீ அளவிலும் அதிகபட்ச அகலம் 7 செ.மீ அளவிலும் கழுத்தின் சதைப் பகுதிகள் முழுவதும் தெரியும்படியும் கழுத்தில் உள்ள அனைத்து பெரிய ரத்த நாளங்களும் அறுபட்ட நிலையிலும் காணப்பட்டது. கழுத்து எலும்புகளில் சி4, சி5 உடைந்த நிலையில் காணப்பட்டது. 2 செ.மீ நீளமும் 1/2 செ.மீ அகலமும், 1/2 செ.மீ ஆழமும் உள்ள வெட்டுக் காயம் முதுகின் நடுப்பகுதியில் காணப்பட்டது. உள்ளுறுப்புகளில் இதயம் வெளிர்ந்த நிலையில் அறைகள் காலியான நிலையில் காணப்பட்டது. நுரையீரல், கல்லீரல், சிறுநீரகம், மண்ணீரல் அனைத்தும் வெளிர்ந்த நிலையில் காணப்பட்டது. வயிற்றுப் பகுதியில் சுமார் 780 முதல் 800 மி.லி வரை பாதி நிலையில் செரிமான உணவுப் பொருட்கள் காணப்பட்டது. குடல் பகுதிகள் வெளிரென்றும் காலியாகவும் காணப்பட்டது. தலைப்பகுதியில் உடைந்த காயங்கள் எதுவும் காணப்படவில்லை. மூளை வெளிர்ந்த நிலையில் காணப்பட்டது. எனது பிரேத பரிசோதனையில் இறந்து போனவர் நான் பிரேத பரிசோதனை செய்யும் நேரத்திற்கு முன்பாக 10 லிருந்து 14 மணிநேரத்திற்கு இடைப்பட்ட காலத்தில்

இறந்திருப்பார் என நான் சான்றளிக்கிறேன். என்னிடம் காட்டப்படும் அ.த.சா.பொ.1 போன்ற ஆயுதத்தால் இறந்தவருக்கு காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் உள்ளது. கழுத்தில் ஏற்பட்ட ஆழமான வெட்டுக் காயத்தாலும் அதிமுக்கிய கழுத்தின் ரத்த நாளங்கள் அறுபட்டதாலும் ஏற்பட்ட அதிதீவிர ரத்தப் போக்கினாலும் அதிர்ச்சியாலும் இறப்பு ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்று நான் சான்றளிக்கிறேன்.

இறந்து போன தனபாக்கியம் என்பவரின் இறந்தவரின் பிரேதத்தை காலை 11.15 மணிக்கு நான் பிரேத பரிசோதனை செய்ய ஆரம்பித்தேன். அவரது உடல் வயதிற்கேற்ப உடற்பருமன் இருந்தது. கண்கள் மூடிய நிலையில் இருந்தது. நாக்கு வாயின் உள்ளே இருந்தது. இடது முன்கை, முகம், கழுத்துப் பகுதிகளில் ரத்தக் கறைகள் படிந்திருந்தது. வெளிகாயங்கள்: 1.5 செ.மீ நீளமும் 1/2 செ.மீ அகலமும் வெட்டுக்காயம் இடது கன்னக்குழியில் காணப்பட்டது. 1/2 செ.மீ நீளமும் 1/2 செ.மீக்கும் குறைவான ஆழமுள்ள வெட்டுக்காயம் இடது கண்ணிற்கு மேல்புறம் புருவத்தில் காணப்பட்டது. 5 செ.மீ நீளமும் 3 முதல் 4 செ.மீ ஆழமும் அதிகபட்ச அகலமான 2.5 செ.மீ உள்ள வெட்டுக் காயம் கழுத்தின் இடது பகுதியில் காணப்பட்டது. கழுத்தின் அதிமுக்கிய ரத்த நாளங்கள் அறுபட்ட நிலையில் இருந்தது. கழுத்து எலும்புகள் சி5, சி6 உடைந்த நிலையில் காணப்பட்டன. இடது முன்னங்கை முழுவதுமாக அறுபட்ட நிலையில் தோள்பட்டையிலிருந்து 30 செ.மீ இறக்கத்திலும் இடது முழங்கையிலிருந்து 13 செ.மீ இறக்கத்திலும் காணப்பட்டது. அந்த வெட்டுக் காயம் 6 செ.மீ அளவில் அகலத்துடன் காணப்பட்டது. 10 செ.மீ நீளமும் 6 செ.மீ அகலமும் அதிகபட்ச ஆழமான 6 செ.மீ அளவிலும் வெட்டுக் காயம் இடது முழங்கையின் பின்பகுதியில் காணப்பட்டது. 10 செ.மீ நீளமுள்ள வெட்டுக் காயம் இடது கையின் முன்பகுதியிலுள்ள எலும்புகள் தெரியும்படி காயம் இருந்தது. 7 செ.மீ நீளமும் 3 செ.மீ ஆழமும் 6 செ.மீ அகலமும் உள்ள வெட்டுக் காயம் இடது கையின் மேல் பகுதியில் தசைகள் தெரியும்படியும் ரத்த நாளங்கள் அறுபட்ட நிலையிலும் இருந்தது. 5 செ.மீ நீளமும் 1 செ.மீ அகலமும் 1/2 செ.மீ ஆழமும் ஒரு வெட்டுக் காயம் இடதுபக்க பின்னந்தலையில் காணப்பட்டது. 28 செ.மீ நீளமும் அதிகபட்ச அகலம் 8 செ.மீ அளவிலும் 7 செ.மீ ஆழமும் உள்ள வெட்டுக் காயம் வலது தோள்பட்டையிலிருந்து 9 செ.மீ கீழ் இறக்கத்தில் ஒரு வெட்டுக் காயம் தசைகள் வெளியே தெரிந்த நிலையிலும் ரத்த நாளங்கள் அறுபட்ட நிலையிலும் காணப்பட்டது. 2 செ.மீ நீளமும் 1/2 செ.மீ ஆழமும் உள்ள ஒரு வெட்டுக் காயம் வலது முன் கன்னத்தில் காணப்பட்டது. 4 செ.மீ நீளமும் 1/2 செ.மீ அகலமும் 5

முதல் 6 செ.மீ ஆழமும் உள்ள ஒரு வெட்டுக் காயம் இடது பின் பக்கத்தில் காணப்பட்டது. உள்ளுறுப்புகளில் கல்லீரல், சிறுநீரகம், நுரையீரல், மண்ணீரல் அனைத்தும் வெளிரிய நிலையில் காணப்பட்டது. இதயம் வெளிரிய நிலையிலும் அறைகள் காலியான நிலையிலும் காணப்பட்டது. வயிற்றில் 100 - 200 மிலி பாதி செரிமான நிலையில் உணவு காணப்பட்டது. குடல்களில் 75 - 100 மிலி அளவிற்கு செரிமான நிலையில் உணவு காணப்பட்டது. 5 செ.மீ நீளமுள்ள எலும்புமுறிவு இடது பின்னந்தலையில் காணப்பட்டது. மூளை வெளிரிய நிலையில் காணப்பட்டது. என்னிடம் காணப்படும் அ.த.சா.பொ.1 ஆயுதத்ததால் இறந்தவருக்கு காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் உள்ளது. இறந்தவர் என்னுடைய பிரேத பரிசோதனைப்படி நான் பிரேத பரிசோதனை செய்யும் நேரத்திற்கு முன்பாக 10 லிருந்து 14 மணி நேரத்திற்கு முன்பாக இறந்திருக்கலாம் என நான் சான்றளிக்கிறேன். கழுத்தின் அதிமுக்கிய ரத்த நாளங்கள் அறுபட்டதால் அதிதீவிர ரத்தப் போக்கு ஏற்பட்ட நிலையில் இறப்பு ஏற்பட்டிருக்கும் என நான் சான்றளிக்கிறேன்.

இறந்து போன ராஜேஸ்வரி என்பவரின் பிரேதத்தை மதியம் 12.15 மணியளவில் நான் பிரேத பரிசோதனை செய்ய ஆரம்பித்தேன். அவர் மெலிதான தேகம் உடையவராக அவரது பிரேதம் காணப்பட்டது. கண்கள் மூடிய நிலையில் காணப்பட்டது. நாக்கு வாயின் உட்புறமாக இருந்தது. அவரது அக்குள் மற்றும் பிறப்புறுப்பில் முடிகள் காணப்பட்டது. வெளிக்காயம் 10 செ.மீ நீளமும் அதிகபட்ச அகலம் 7 செ.மீ அளவில் அதிகபட்ச ஆழம் 8 செ.மீ அளவில் வெட்டுக் காயம் வலது கையின் மேல்புறத்தில் தசைகள் தெரிந்த நிலையிலும் ரத்த நாளங்கள் அறுபட்ட நிலையிலும் காணப்பட்டது. 13 செ.மீ நீளமும் அதிகபட்ச அகலம் 7 செ.மீ அதிகபட்ச ஆழம் 6 செ.மீ ம் உள்ள ஒரு வெட்டுக் காயம் இடது கழுத்தில் அனைத்து அதிமுக்கிய ரத்த நாளங்கள் அறுபட்ட நிலையிலும் தசைகள் வெளியே தெரிந்த நிலையிலும் காணப்பட்டது. கழுத்தின் சி4, சி5 எலும்புகள் முறிந்த நிலையில் காணப்பட்டது. உள்ளுறுப்புகள் இதயம் வெளிரென்றும் அறைகள் காலியாகவும் காணப்பட்டது. நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம் மிக வெளிரிய நிலையில் காணப்பட்டது. வயிற்றுப் பகுதியில் 300- 400 மிலி அளவில் செரிமான நிலையில் உணவு காணப்பட்டது. குடல் பகுதி வெளிரிய நிலையில் 50 - 100 மிலி அளவு செரிமான உணவு காணப்பட்டது. தலைப் பகுதியில் வெளிக்காயங்கள் காணப்படவில்லை. மூளை வெளிரிய நிலையில் காணப்பட்டது. என்னிடம்

காட்டப்படும் அ.த.சா.பொ.1 ஆயுதத்தால் மேற்கூறிய காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் உள்ளது. இறந்தவர் நான் பிரேத பரிசோதனை செய்யும் நேரத்திற்கு முன்பாக 12 லிருந்து 16 மணிநேரத்திற்கு முன்பாக இறந்திருக்கலாம் என்று நான் சான்றளிக்கிறேன். இறந்தவருக்கு கழுத்திலுள்ள அதிமுக்கிய ரத்த நாளங்கள் அறுபட்டு அதனால் ஏற்பட்ட அதிதீவிர ரத்தப் போக்கினால் அவர் இறந்திருக்கலாம் என நான் சான்றளிக்கிறேன். அவரது கர்ப்பப்பை வெளிரிய நிலையிலும் காலியான நிலையிலும் காணப்பட்டது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

ஒவ்வொரு பிரேதத்தையும் பரிசோதனை செய்ய எவ்வளவு நேரம் ஆனது என்றால் ஒரு மணிநேரம் ஆனது. நான் பிரேத பரிசோதனை செய்த முதல் மற்றும் இரண்டாவது பிரேதத்திற்கு நான் பிரேத பரிசோதனை செய்த நேரத்திலிருந்து 10லிருந்து 14 மணிநேரத்திற்கு முன்பாக இறந்திருக்கலாம் என ஒரே மாதிரியாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் காயங்களை நிறத்தை வைத்து குறிப்பிடவில்லை. ஆனால் காயங்களில் ஏற்பட்டுள்ள ரத்தக் கறைகளை நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அ.த.சா.பொ.1அருவாளால் பலமுறை வெட்டும் போது அதன் முனைப் பகுதியால் குத்துக் காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது. நான் வழங்கியுள்ள பிரேத பரிசோதனை அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ள காயங்கள் அனைத்தும் வெட்டுக் காயங்கள் ஆகும். குத்துக் காயங்கள் என்று நான் குறிப்பிட்டு நான் சான்றளிக்கவில்லை. முனைப் பகுதி இல்லாத வாள் போன்ற ஆயுதத்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது. நான் பிரேத பரிசோதனை செய்த 3 பிரேததங்களிலும் வேறு வேறு மாதிரியான கழுத்தில் காயங்கள் காணப்பட்டது என்றால் சரிதான். ஒரே மாதிரியான கழுத்துக் காயங்கள் ஏற்படுவதற்கு ஒருவர் பிடித்துக் கொண்டு மற்றொருவர் வெட்டினால் அதுபோல் ஏற்படுமா என்றால் என்னால் அது குறித்து சொல்ல முடியாது. நான் பிரேத பரிசோதனை செய்த ராஜேஸ்வரின் என்ற பிரேதத்தில் வலது அக்குள் பகுதியில் காயங்கள் எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். 3 பிரேத பரிசோதனைகளும் மானாமதுரை அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து தான் செய்யப்பட்டது. அங்கிருந்து 18 கி.மீ தூரத்தில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். இதுபோன்ற முக்கியமான வழக்குகளில் 3 பிரேத பரிசோதனைகளை ஒரே நாளில் ஒரே நேரத்தில் செய்ய வேண்டிய

சூழ்நிலை ஏற்படும் போது அவைகளை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தான் செய்ய வேண்டுமென்றால் அவசியம் இல்லை மானாமதுரை அரசு மருத்துவமனை சவக்கிடங்கிலும் செய்யலாம். முழுமையான உணவு செரிமானம் என்பது 12 மணிநேரத்திற்குள் முடிந்துவிடுமா என்றால் இல்லை. நான் கூறிய அளவிற்கு காயங்கள் ஏற்பட்டிருக்கும் நிலையில் அ.த.சா.பொ.1ல் ரத்தக் கறைகள் ஏற்பட்டிருக்குமா என்றால் ஏற்பட்டிருக்கும்.